


# கவச் (KAVACH) பயன்பாட்டினை நிறுவுதல் மற்றும் பயன்படுத்துதல்

**(பதிப்பு 1.0 – 09.03.2021)**

**தேசிய தகவலியல் மையம்**
**தமிழ்நாடு மாநில மையம்**
**ராஜாஜி பவன், பெசன்ட் நகர்,**
**சென்னை, தமிழ்நாடு.**

| வ.எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | சைபர் பாதுகாப்பு | 3 |
| 2 | கவச் பயன்பாடு (Kavach Application) ஒரு அறிமுகம் | 3 |
| 3 | கவச் பயன்பாடு - கவனத்தில் கொள்ளவேண்டியது | 4 |
| 4 | கவச்-ஐ நிறுவுவதல் - சுய மின்னஞ்சலுக்காக | 6 |
| 5 | கவச்-ஐ பயன்படுத்தும் வழிமுறை | 8 |
| 6 | உங்கள் மின்னஞ்சலை அணுக உங்களின் பிரதிநிதியை அனுமதிக்க | 13 |
| 7 | முக்கியக் குறிப்புகள் | 15 |




**வெளியீடு**: மாநில தேசிய தகவலியல் மையம், சென்னை. **தேதி:** 09.03.2021

## சைபர் பாதுகாப்பு (Cyber Security):

சைபர் பாதுகாப்பு என்பது அமைப்புகள், நெட்வொர்க்குகள் மற்றும் நிரல்களை டிஜிட்டல் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் நடைமுறையாகும். இந்த இணைய தாக்குதல்கள் பொதுவாக முக்கியமான தகவல்களை அணுகுவது, மாற்றுவது அல்லது அழிப்பது மேலும் பயனர்களிடமிருந்து பணம் பறித்தல் அல்லது சாதாரண வணிக செயல்முறைகளுக்கு இடையூறு விளைவித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன; பயனுள்ள இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவது இன்று சவாலானது, ஏனென்றால் தாக்குபவர்கள் ஒவ்வொரு நாளும் மிகவும் புதுமையான தொழில்நுட்பம் மூலம் தாக்க முயல்கின்றனர்.

## சைபர் பாதுகாப்பின் முக்கியத்துவம்:

ஒரு அரசோ அல்லது நிறுவனமோ பலவித மிகவும் முக்கியமான தனிப்பட்ட தரவுகளை சேமித்து வைத்தும், வேண்டிய நேரங்களில் அத்தகவல்களின் குறிப்பிட்ட பகுதியை மின்னணு சாதனங்கள் வாயிலாக பகிர்ந்தும் வருகின்றனர். இப்படி சேமிக்கப்பட்ட தரவுகள் மற்றும் பகிரும் தரவுகளை அனுமதி இல்லாத நபர்களின் அணுகுதல்களிடமிருந்து தற்காத்து கொள்ளவும் சைபர் பாதுகாப்பு என்பது அதிமுக்கியத்துவம் வாய்ந்தததாக உள்ளது.

## கவச் பயன்பாடு (Kavach Application) - ஒரு அறிமுகம்:

சாதரணமாக உங்களின் NIC மின்னஞ்சலை அணுக பயனர் பெயர் / கடவுச்சொல் போதுமானது. இந்த நடைமுறையில் சிறிது மாற்றம் செய்து மற்றுமொரு பாதுகாப்பு அளிக்க இந்த கவச் பயன்பாடு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது கடவுச்சொல் அளிப்பதுடன், கவச் பயன்பாடு வாயிலாக மேலும் ஒரு அங்கீகாரத்தை அளித்து உங்களின் மின்னஞ்சலை அணுக வேண்டியிருக்கும். இதன் மூலம் உங்களின் மின்னஞ்சலை அனுமதி இல்லாத எந்த ஒரு நபரும் அணுக இயலாது. உங்களின் மின்னஞ்சல் பயன்பாட்டை பாதுகாப்பதுடன், அதன் அணுகுதல்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

இந்த கவச் பயன்பாட்டை உங்களின் கணினி, அலைபேசி மற்றும் மடிக்கணினி போன்ற சாதனங்களில் நிறுவி, உங்களின் மின்னஞ்சலையும் இணைத்த பிறகு, ஒவ்வொரு முறையும் உங்களின் மின்னஞ்சலை அணுகும்போதும், இந்த கவச் பயன்பாட்டிற்கு வரும் அறிவிப்பை “Accept” செய்து உள்நுழைய வேண்டும். இந்த

கவச் பயன்பாடனது மிகவும் எளிமையானது. இந்த வழிகாட்டியில் எளிய தமிழில் விளக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றினாலே போதுமானது. மேலும் கவச் பயன்பாடு பற்றிய விவரங்களுக்கு உங்களின் மாவட்ட / துறை NIC அதிகாரிகளை தொடர்பு கொள்ளுங்கள்.

## கவச்(கவசம்) - Kavach நிறுவுவதற்கான கட்டமைப்பு படிகள்

**நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டியது:**

தேசிய தகவலியல் மையமானது (NIC) எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்களுடைய உள்நுழைவு சான்றுகள் (பயனர் பெயர் / கடவுச்சொல்) வேண்டி மின்னஞ்சல் அனுப்பாது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். ஒருவேளை உங்களுடைய பயனர் பெயர் / கடவுச்சொல் விவரங்கள் வேண்டி மின்னஞ்சல் வரப்பெற்றால் அதன் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம். அந்த மின்னஞ்சல் போலியாகவும் மற்றும் உங்கள் கணினிக்கு தீங்கிழைக்கும் மென்பொருளை கொண்டிருக்கலாம்.

2FA (Two Factor Authentication) அதாவது தங்கள் மின்னஞ்சலுக்குள் நுழைய **இரண்டு அடுக்கு அங்கீகாரம் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது**. எனவே NIC-யில் இருந்து மின்னஞ்சல் சேவைகளைப் பெறும் அனைத்து பயனர்களும் தங்கள் கணக்கை அணுக 2FA ஐப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் உங்கள் மின்னஞ்சல் பாதுகாப்பாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

பயனர்கள் தங்கள் தொடர்பு சாதனங்களில் (அலைபேசி / மடிக்கணினி / கணினி) கவச்-ஐ உடனடியாக நிறுவ அறிவுறுத்தப்படுகிறார்கள். கவச்-ஐ ஒரே ஒரு சாதனத்தில் மட்டுமே நிறுவ நீங்கள் தேர்வுசெய்தால், அந்த சாதனம் (உதாரணமாக அலைபேசியில் நிறுவ விரும்பினால்) எப்போதும் உங்களுடன் அலைபேசி இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஏனெனில் மின்னஞ்சலின் அணுகலுக்காக பெறும் அறிவிப்பை நீங்கள் அந்த சாதனத்தில் வாயிலாக அங்கீகரிக்க வேண்டும்.


### குறிப்பு:

1. **பயனர்கள் தங்கள் மின்னஞ்சலை கவச்-ல் செயல்படுத்த, அவர்களின் பயனர் கணக்கு மின்னஞ்சல் சேவையகத்தில் (Mail Server) அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, கவச்-க்கு அங்கீகரிக்கப்பட்ட பின்பு mailservices@gov.in -லிருந்து மின்னஞ்சல் பெறும் பயனர்கள்**

**மட்டுமே இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். மற்ற பயனர்கள் அனுப்பிய மின்னஞ்சலை ஒரு பயனர் பெற்றால், தயவுசெய்து முயற்சி செய்து செயல்படுத்தாதீர்கள், ஏனெனில் அது பிழையைக் கொடுக்கும். பயனர் நேரடியாக mailservices@gov.in -லிருந்து மின்னஞ்சல் பெற காத்திருக்க வேண்டும்**.

2. Kavach-ல் பதிவு செய்யும் போது அனுப்பப்படும் OTP-ஐ பெற உங்களது அலைபேசி எண் மின்னஞ்சல் கணக்கில் சரியாக இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
3. உங்கள் அலைபேசி எண் அல்லது வேறு எந்த தகவலையும் புதுப்பிக்க அந்தந்த NIC ஒருங்கிணைப்பாளர் / பிரதிநிதித்துவ நிர்வாகி / மாவட்ட தேசிய தகவலியல் மைய அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுங்கள்.
4. Kavach-ஐ நிறுவியிருக்கும் அனைத்து சாதனங்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்படும். எனவே பயன்பாட்டின் எளிமைக்காக மின்னஞ்சல் சேவைகளை அணுக பயன்படும் அனைத்து (அதிகபட்சம் 3) சாதனங்களிலும் நிறுவவும்.

உங்கள் மின்னஞ்சலில் (https://email.gov.in) நுழைந்த பிறகு **How to Install Kavach App on Android and iPhone** (ஆண்ட்ராய்டு மற்றும் ஐபோனில் கவச் பயன்பாட்டை எவ்வாறு நிறுவுவது) என்ற தலைப்பின் கீழ் காணொளிப் பதிவு உள்ளது.



## கவச்-ஐ நிறுவுவதற்கான படிகளை கீழே காணவும்.

## I) உங்களுடைய சுய மின்னஞ்சலுக்காக:

1. கணினி, மடிக்கணினி மற்றும் அலைபேசியில் (ஆண்ட்ராய்டு அல்லது ஐபோன்) கவச்சை நிறுவுவது:

   **கணினி, மடிக்கணினி**:

   - https://kavach.mail.gov.in என்ற தளத்திலிருந்து கணினி பயன்பாட்டைப் (Kavach.msi) பதிவிறக்கவும்.
   - கணினி பயன்பாட்டிற்கான குறைந்தபட்ச தேவை
     - Windows 7
     - MAC 10.11
     - Ubuntu 19.04
     - CentOS/RedHat 6.9


   **அலைபேசி**

   - உங்களது அலைபேசியின் "**Google Play Store**" அல்லது **"IOS Play Store"** –ல் **"Kavach Authentication"** என்பதைத் தேடி சரியான செயலியை நிறுவிக்கொள்ளவும்.(கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது)

   - அலைபேசி பயன்பாட்டிற்கான குறைந்தபட்ச தேவை
     - **Android OS:** 2.3 மற்றும் அதற்கு மேற்பட்டவை
     - **iOS:** 7.0 மற்றும் அதற்கு மேற்பட்டவை

**App Store**

**Google Play Store**





நீங்கள் https://kavach.mail.gov.in என்ற தளத்திலிருந்தும் செயலியை பதிவிறக்கம் செய்யலாம்:

2. பதிவிறக்கிய பிறகு, விதிமுறை மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு நிறுவுங்கள்.
3. உங்கள் பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்லைக் கொடுத்து அங்கீகரிக்கவும்.
4. உங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசியில் குறுஞ்செய்தி (SMS) வழியாக 6 இலக்க குறியீடு OTP (ஒரு முறை கடவுச்சொல்) பெறுவீர்கள். OTP ஐ உள்ளீடு அளித்து, “**Submit”** என்பதைக் கிளிக் செய்து பதிவுசெய்தலை முடிக்கவும்.


## II) கவச்-ஐ பயன்படுத்தும் வழிமுறை:

வெற்றிகரமான நிறுவுதலுக்குப் பிறகு கீழ்வரும் வழிமுறைகளை பின்பற்றவும்:

1. உங்கள் பயனர்பெயர் / கடவுச்சொல் உள்ளீடு அளித்து **"Submit"** க்ளிக் செய்து உள் நுழையவும்.





2. கவச் பயன்பாட்டிலிருந்து பெறப்படும் விதிமுறைகளுக்கு உடனடியாக சம்மதம் அளித்து உள்ளே செல்லவும்.
3. உங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசியில் குறுஞ்செய்தி (SMS) வழியாக 6 இலக்க குறியீடு OTP (ஒரு முறை கடவுச்சொல்) பெறுவீர்கள். OTP ஐ உள்ளீடு அளித்து, "**Submit"** என்பதைக் கிளிக் செய்து உள் நுழையவும். தற்போது உங்கள் மின்னஞ்சல் கணக்கை கவச்-ல் பதிவு செய்ததுடன், அந்த சாதனத்தையும்(கணினி / அலைபேசி) வெற்றிகரமாக அங்கீகரித்து விட்டீர்கள்.




4. இனி நீங்கள் எந்த சாதனத்திலிருந்தும் உங்கள் மின்னஞ்சலை அணுகும் போதும், உங்களது பயனர் பெயர் / கடவுச்சொல் உள்ளீடு செய்த பிறகு ஒரு அறிவிப்பு இந்த கவச் பயன்பாட்டிற்கு வரும்.

**Web Browser:**





**Kavach Application (கவச் பயன்பாடு)**



நீங்கள் உடனடியாக **"Accept"** செய்து விடவேண்டும். தாமதித்தால் **"Time Out"** பிழை வந்துவிடும்.




தாமதிக்காமல் **"Accept"** செய்தால் உங்கள் மின்னஞ்சல் கணக்கில் வெற்றிகரமாக உள்நுழைவு செய்யலாம்.





5. கவச் பயன்பாட்டில் அறிவிப்பை பெற நீங்கள் வலுவான பிணைய சமிக்ஞை மண்டலத்தில் (Strong Network Signal Zone) இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க. எந்தவொரு காரணத்திற்காகவும் நீங்கள் பலவீனமான சமிக்ஞை மண்டலத்தில் இருந்தால், உடனடியாக அறிவிப்பைப் பெற முடியாது. அத்தகைய சூழ்நிலையில் பின்வரும் இரண்டு வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தவும்.

I. அறிவிப்பைப் பெற **“PULL”** என்பதை க்ளிக் செய்யவும். ஏதேனும் அறவிப்பு இருந்தால் வரப்பெறலாம் அல்லது **“No Pending Notifications”** (அறிவிப்பு நிலுவையில் இல்லை) என்ற செய்தி வரப்பெறலாம்.

**அல்லது**


II. உங்கள் கடவுச்சொல்லின் இறுதியில் OTP யையும் சேர்த்து நீங்கள் மின்னஞ்சலுக்குள் உள்நுழையலாம். OTP என்பது கீழே காட்டப்பட்டுள்ளபடி உங்கள் கவச் பயன்பாட்டின் பிரதான திரையில் நீங்கள் காணும் எண்.




உதாரணமாக உங்கள் கடவுச்சொல் TestPass123# எனில், நீங்கள் கடவுச்சொல் காலத்தில் கொடுக்கவேண்டியது TestPass123#305326 . இந்த OTP யானது 30 நொடிகளுக்கு ஒரு முறை மாறிக்கொண்டே இருக்கும் என்பதை நினைவில் கொள்க.

6. கவச் பயன்பாட்டைப் பயன்படுத்தி நீங்கள் “User Country Policy” க்கு விண்ணப்பிக்கலாம். அதாவது நீங்கள் அயல் நாட்டிலிருந்தும் உங்கள் மின்னஞ்சலை அணுக அனுமதி பெறுவது.
7. கவச் மூலமாக IMAP சேவையை இயக்கத்திலோ அல்லது முடக்கியோ (Enabled/Disabled) வைக்கலாம். அதாவது Thunderbird, Outlook போன்ற mail client களில் உங்கள் மின்னஞ்சல் சேவைப் பெறுவதை கட்டுபடுத்துதல் ஆகும். **நீங்கள் இது போன்ற mail client களில் உங்கள் மின்னஞ்சலை அணுகும்போது எந்த ஒரு அறிவிப்பையும் கவச்-ல் பெறமாட்டீர்கள் என்பதை நினைவில் கொள்க.**

8. அவ்வப்போது உங்களின் மின்னஞ்சல் பயன்பாடு பற்றிய விவரங்களை “Logs” என்பதை பயன்படுத்தி கண்காணித்துக் கொள்வது சிறப்பு.





9. கவச்-ல் உள்ள அனைத்து வசதிகளையும் தயவுசெய்து ஒவ்வொன்றாக பயன்படுத்திப் பார்த்து இந்த பயன்பாட்டை திறம்பட கையாள அறிவுறுத்தப்படுகிறீர்கள்.


## III) உங்கள் கணக்குடன் ஒரு பயனரைச் சேர்க்க (உங்கள் மின்னஞ்சலை அணுக உங்களின் பிரதிநிதியை அனுமதிக்க வழங்கப்பட்டுள்ளது):

**உங்கள் மின்னஞ்சல் கணக்கை அணுக நீங்கள் அனுமதிக்க விரும்பும் நபர் இந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

1. உங்கள் பிரதிநிதியின் மின்னஞ்சல் கணக்கும் கவச் பயன்படுத்த முன்பே அனுமதியளிக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தி கொள்ளவும்.. இதை உங்களுடைய NIC ஒருங்கிணைப்பாளர் / பிரதிநிதித்துவ நிர்வாகியை அணுகி உறுதிப்படுத்தவும் அல்லது mailservices@nic.in க்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பவும்.
2. மேலே உள்ள “உங்களுடைய சுய மின்னஞ்சலுக்காக:” என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்களின் பிரதிநிதி தனது சொந்த மின்னஞ்சல் முகவரிக்கான கவச் பயன்பாட்டை நிறுவுவார்.
3. உங்களின் பிரதிநிதி தனது சொந்த மின்னஞ்சலை கவச் பயன்பாட்டில் நிறுவி இயக்கிய பிறகு, அவரது கவச் பயன்பாட்டில் உள்ள “**Add Account**” (புதிய கணக்கைச் சேர்) என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.
4. உங்களின் பிரதிநிதியானவர் அவர் அணுக விரும்பும் பயனரின் (அதாவது இந்த நிகழ்வில் உங்களின்) பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் விவரங்களை உள்ளிட்டு “Submit” செய்ய வேண்டும்.




5. உங்களின் மின்னஞ்சல் இணைக்கப்பட்ட அலைபேசி எண்ணிற்கு அனுப்பட்ட OTP ஐ உங்களின் பிரதிநிதியானவர் உங்களிடம் இருந்து பெற்று உள்ளீடு செய்து உள் நுழைய வேண்டும்.
6. தற்போது பதிவுசெய்தல் நடைமுறையானது நிறைவடையும். இப்போது உங்கள் பிரதிநிதி அல்லது உங்களால் இது போன்று அங்கீகாரம் பெற்றவர் உங்களின் மின்னனஞ்சல் கணக்கை அணுக முடியும்.





7. அதிகபட்சம் இரண்டு (2) பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## IV) முக்கியக் குறிப்புகள்:

1. கவச் பயன்பாட்டை பயன்படுத்த உங்களால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்களின் விவரங்களை https://kavach.mail.gov.in/ தளத்தில் உங்களின் மின்னஞ்சல் பயனர் பெயர் / கடவுச்சொல் மற்றும் அலைபேசி எண்ணிற்கு வரும் OTP ஐ உள்ளீடு செய்து உள் நுழைந்து சரிபார்க்கலாம் மற்றும் நிர்வகிக்கலாம்.




- **"Manage Activated Devices" - உங்களின் மின்னஞ்சல் கணக்கை கவச் பயன்பாட்டின் வழியே அனுமதிக்க உங்களால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்களின் விவரம் அறியலாம்.**
- **"De Register" - கவச் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட சாதனங்களை நீக்கலாம்.**
- **Windows Client, Mac Client, Linux Client** மற்றும் **Android Client** போன்ற பயன்பாட்டு மென்பொருட்களை இத்தளத்தின் வாயிலாக தரவிறக்கம் செய்யலாம்.



2. உங்களின் மின்னஞ்சல் கணக்கை கவச் பயன்பாட்டில் நிறுவிய பிறகு, உங்களின் மின்னஞ்சலை அணுகும் ஒவ்வொரு முறையும் நீங்கள் இந்த கவச் பயன்பாட்டின் வழியாக அனுமதி பெற்றே உள்நுழைய முடியும் என்பதை நினைவில் கொள்க.
3. உங்களின் மின்னஞ்சலை அணுகும் ஒவ்வொரு முறையும், நீங்கள் உங்களின் மின்னஞ்சல் கணக்கை கவச் பயன்பாட்டிற்காக அங்கீகரித்துள்ள அனைத்து சாதனங்களுக்கும் (அலைபேசி, கணினி) அறிவிப்பு செல்லும். ஏதேனும் ஒரு சாதனத்தின் வழியே அனுமதி அளித்து உங்களின் மின்னஞ்சல் கணக்கில் உள்நுழையலாம்.
4. இந்த ஈரடுக்கு அங்கீகாரம் என்பது உங்களின் மின்னஞ்சலை வேறு எந்த நபரும் தவாறாக பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கவே கவச் பயன்பாடானது அவசியமாக்கப்பட்டுள்ளது. எனவே எந்தவித தயக்கமும் இன்றி இந்த கவச் பயன்பாட்டினை நிறுவி உங்களின் மின்னஞ்சல் கணக்கின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

**கவச் பயன்பாட்டில் எழும் சந்தேகம் மற்றும் சிக்கல்களுக்கு தயவுசெய்து அந்தந்த மாவட்டம் / அமைச்சகம் / துறையில் உள்ள NIC அதிகாரிகள் / பிரதிநிதித்துவ நிர்வாகியைத் தொடர்பு கொள்ளுங்கள்.**

* * * * * * *